பதிவு எண்: M. 6311 ★ தொலைபேசி: 51331 பிறவியது: 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர்: இரா. செழியன் எம்.ஏ. எம்.பி.

மலர்: 15] சென்னை: மாசி 28 (11—3—68) திங்கள் ★ வெளியூர்: மாசி 29 (12—3—68) செவ்வாய் [இதழ்: 224

குடும்பக் கட்டுப்பாடு செய்திடுவீர்

பின்னையோ பின்னை தொல்லையோ தொல்லை என்கின்ற நிலை ஏற்படாமல், குடும்பம் தெவிட்டாதஇன்பமாக விளங்கவும், குழந்தைகள் அறிவு நிறைந்து ஆற்றல் மிகுந்தவர்களாக இருக்கவும் அளவோடு பெற்று வளமோடு வாழுங்கள்.

காதில் விழுந்தது!

"கேட்டாலும் கேட்டார்—எப்படிச் சூடாக நறுக்குத் தெரித்தாற்போல் கேட்டிருக்கிருர் பார்த்தாயா, எங்கள் தலைவர்?

"திருவைகுண்டத்தில் பேசியிருக்கிருரே, அதைத்தானே?"

"பேச்சா அது? 'கேள்விக் கணை' அப்பா — கேள்விக் கணை! பதில் சொல்ல முடியுமா யாராலாவது? ஒரே கேள்விதான்—ஒன்றே ஒன்று தான் — என்ன அருமை! சும்மா சொல்லக்கூடாது—காமராசர் என்ருல் காமராசர் தான்! சும்மாவா அவரை, 'தலைவர்' என்றே அழைக்கிருேம் இன்னும்! என்ன கேள்வி! ஆகா, எப்படிப் பட்ட கேள்வி! 'தமிழ்நாட்டில் தற்போது, சட்டம்—ஒழுங்கு எங்கிருக்கிறது என்பதனைக் காட்டமுடியுமா?" எனக் கேட்டிருக்கிருர் ஐயா, எங்கள் தலைவர்! கேள்வி ஒன்றும், 'காபிரைட்' பெற்றது அல்ல! காங்கிரசுக்காரர்களுக்குத்தான் வழங்கியிருக்கிருர் — புதிய பதிப்பாக! இதோ நானும் அதையே கேட்கிறேன் — 'சட்டமும் அமைதியும்' எங்கே இருக்கிறது—காட்டு பார்க்கலாம்! கேட்கிருர் எங்கள் தலைவர்! என்னப்பா, நான் பேசிக்கொண்டே இருக்கிறேன்—நீ சிரித்துக்கொண்டே இருக்கிருய்! கேள்வி புரியவில்லையா? தமிழில்தானே கேட்டிருக்கிருர்—அதற்கு ஏன் சிரிக்கிருய்?"

"ஒன்றுமில்லை; உங்களுக்கு நம்பிக்கை இருக்கிற இரணியன் — பிரகலாதன் கதை நினைவுக்கு வந்துவிட்டது! கூடவே சிரிப்பும் வந்துவிட்டது! 'எங்கே இருக்கிருன் அந்த இறைவன்' என்று அதிலே ஒரு வசனம் வரும்; அதற்கு ஒரு பதிலும் வரும்; 'அங்கே...இங்கே! உன்னில் ...என்னில்! தூணில்...துரும்பில்! இறைவன் இல்லாத இடமே இல்லை' என்பதாக! 'சட்டத்தையும் அமைதியையும் காண்பிக்க முடியுமா' என்று இப்படி ஒட்டுமொத்தமாக—ஒரே கேள்வியாகக் காமராசர் கேட்டால்? பதில் சொல்லுவது கடினம் ஒன்றுமில்லை; அதனுல் அவருக்குத் தான் கஷ்டம்."

"பரவாயில்லை, சொல்லேன்; என்னதான் அந்தப் பதிலாக இருக்கமுடியும்—பார்க்கிறேன்!"

"பார்க்க வேண்டாம்—சொல்லுகிறேன் கேள்; 'சட்டமும் அமைதியும் எங்கிருக்கிறது எனக் காண்பிக்க முடியுமா?' எனக் காமராசர் கேட்கிருர் அல்லவா? அது வேறெங்கும் இல்லை—அவரில்தான் இருக்கிறது; உன்னில் இருக்கிறது...என்னில் இருக்கிறது; எங்கும் இருக்கிறது...எவரிலும் இருக்கிறது! நாம் எல்லோரும் சேர்ந்ததுதான் சட்டமும் அமைதியும்! தனியாக அப்படி ஏதும் இல்லை; அல்லது, 'ஏட்டில் இருப்பதுதான் சட்டமும் அமைதியும்' என்பதும் இல்லை!"

"எங்கள் தலைவரின் கேள்வியில் இருக்கும் தெளிவு, உன்னுடைய பதிலில் இல்லையேயப்பா!"

"தலைகீழாகச் சொல்லுகிருய்—உண்மை நிலையை! உங்கள் தலைவரின் கேள்வி, முதலில், படிப்பதற்குத் தெளிவுள்ளதுபோல் இருக்கும்; ஆனுல், குழப்பத்தில் பிறந்தது அது! அதனுல்தான், நான் கூறும் பதிலில் உள்ள தெளிவு புரியவில்லை உனக்கு! அதோடு, இப்படிக் கேட்பது சுலபம்; ஆனுல் அந்தக் கேள்வியை நம்புபவர்களைத் தெளிய வைப்பது கடினம்! சட்டமும் அமைதியும் இல்லையென்ருல், திருவைகுண்டத்தில் ஒரு மாநாட்டைக் கூட்டி வைத்துக்கொண்டு இந்தக் கேள்வியைக் காமராசர் கேட்டிருக்க முடியுமா? சட்டமும் அமைதியும் இல்லாமலா உங்கள் கட்சியில் உள்ள 49 பேர், சட்டமன்றத்திற்கு வந்து செல்லுகிருர்கள்? இங்கே என்ன—வங்காளமும் பஞ்சாபுமா தினம் தினம் நடைபெறுகின்றன? இந்தியாவின் தலைநகரிலேயே மாலை நேரங்களில் பெண்கள் நடமாட முடியவில்லையாம்—அந்த நிலையா இங்கு? கழகம் ஆட்சிக்கு வந்தபின்னர் தானே மண்டலத்துக்கு மண்டலம் மாநாடு நடத்தினீர்கள்? கிராமத்துக்குக் கிராமம் பானையை உடைத்தீர்கள்? உதவிக்கு யாரும் வரவில்லையென்ருலும், ஒன்றிரண்டு இடங்களிலாவது கறுப்புக் கொடி காட்டினீர்கள்? சட்டமும் அமைதியும் இல்லாமலா இவையெல்லாம் நடந்தன? பெரும்பான்மையில் குறைந்தாலும், 'அரசியல் கட்சி' என்ற பெருமையுடன் உலவுகிறீர்களே—அது, சட்டமும் அமைதியும் இல்லாததனுலா? அது இருப்பதனுல்தானே அப்பா?"

"அது சரி; நாங்கள் பத்திரிகைகளிலும் பொதுமேடைகளிலும் எழுதி, பேசி, எடுத்துக் காட்டியிருக்கிருேமே—முன்னுள் எம்.எல்.சி. தாக்கப்பட்டது; இப்போதைய எம்.எல்.சி.-யின் கால் வெட்டப்பட்டது—இதெல்லாம் எதைக் காட்டுகிறதாம்? சட்டமும் அமைதியும் இருப்பதையா?"

"அதெல்லாம் நடந்தது வருந்தத்தக்கதுதான்; ஆனுல் அது, 'கழகத்தின் வேலை' என்று பிரச்சாரம் செய்கிறீர்களே — அதற்கு இடம், அனுமதி கிடைத்திருக்கிறதே—அது, சட்டமும் அமைதியும் இருப்பதனுல்தான்! அந்தச் சம்பவங்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு இருக்கிறதே—அது, சட்டமும் அமைதியும் இருப்பதனுல்தான்! 'முரசொலி' அலுவலகத்தைத் தாக்கி, 'சட்டத்தையும் அமைதியையும் குலைத்துவிடலாம்' என்று வன்முறையில் நீங்கள் ஈடுபட்டும்கூட, அந்தச் சம்பவத்தின் மீது சட்டப்படி மட்டும் நடவடிக்கை எடுக்கப்பட்டதே—அது, சட்டமும் அமைதியும் இருப்பதனுல்தான்! அன்பழகனைத் தாக்கி, வம்புக்கு இழுத்து, 'சட்டமும் அமைதியும் இல்லை' என்று பேச—எழுத—மனப்பால் குடித்தீர்களே — அது பலிக்காமல்

(4-ம் பக்கம் பார்க்க)

எலிகளுக்கு ஒரு கோயில்

நாள்தோறும் 40 கிலோ தானியம் படையல்!

புதுடில்லி, மார்ச் 10—இந்தியாவிலேயே இராஜஸ்தான் மாநிலம்தான் எலிகளுக்குப் பேர் போனதாக விளங்குகிறது.

அங்குதான் மிகவும் அதிகமான அளவில் எலிகள் இருக்கின்றன.

மேலும் அங்கே எலிகளை வழிபடுவதற்கென்றே ஓர் ஆலயமும் இருக்கிறது.

எலிகளுக்கான அந்தக் கோயில் பிகானிருக்கு 8 மைல் தொலைவில் உள்ள 'தேஷ்நௌக்' என்ற இடத்தில் உள்ளது; அங்கே மக்கள், எலிகளை வழிபடுகிருர்கள்!

உணவுப் பற்றுக்குறையுள்ள இந்த நெருக்கடி நிலையிலும் நாள் தோறும் 40 கிலோ உணவுத் தானியம் இந்தக் கோயிலில் எலிகளுக்காகப் படைக்கப்படுகிறதாம்!

இராஜஸ்தான் மாநிலத்தில் எலிகளின் எண்ணிக்கை அதிகமாக இருப்பதுடன் எலிகளின் பருமனும் பெரிதாக இருக்கிறது

பாண்டிச்சேரி செய்தி இது:

படிப்பதற்கும் சிரிப்பதற்கும்!

"வெங்கட சுப்பா ரெட்டியார்: அமைச்சரவையில் பிளவு ஏதும் இல்லை"

என்று, கடந்த 9-ந் தேதியன்று பாண்டிச்சேரியில் செய்தியாளர்களிடை பேசுகையில் கூறிய புதுவை மாநில பொதுப்பணித் துறை அமைச்சர் பி. சண்முகம், மேலும் கேட்கப்பட்ட கேள்விகளுக்குப் பதிலாகக் கூறியிருப்பதாவது:—

கேள்வி:—"அமைச்சரவை பதவியேற்றபோது காங்கிரசு உறுப்பினர்கள் பத்துப் பேர் ஏன் நிகழ்ச்சிக்கு வரவில்லை?"

பதில்:— "அவர்கள் ஊரில் இல்லை—அதனுல் வரவில்லை!"

கேள்வி:— "பட்ஜெட் கூட்டம் ஏன் தள்ளிவைக்கப்பட்டிருக்கிறது?"

பதில்:—"காரணம் ஏதும் இல்லை; காலம் போதவில்லை—அதனுல்தான்!"

32 ஆண்டுகளில் உலக மக்கட்தொகை 700 கோடி!

வாஷிங்டன், மார்ச் 11—தற்போதைய உலக மக்கட்தொகை நிமிடத்துக்கு 132 விதம் பெருகி வருகிறது!

"இதே விகிதத்தில் பெருகிக்கொண்டிருக்குமானுல், கி. பி. 2,000-ஆவது ஆண்டில் 700 கோடியாக ஆகிவிடும்"

என்று இங்கு வெளியான புள்ளிவிவரம் ஒன்று அறிவிக்கிறது.

மக்கட்தொகைக் கணக்கெடுக்கும் தனிப்பட்ட நிறுவனம் ஒன்றின் மதிப்பீட்டின்படி, 1968 சனவரி முதல் நாள் உலக மக்கட்தொகை 3,443 மிலியனுகும்.

1969 வாக்கில் இத்தொகை 3,500 மிலியனை எட்டிவிடும்!

1983-ல் 4,500 மிலியனுக இருக்கும்!

நிமிடத்திற்கு 132 குழந்தைகள்!

இந்த ஆண்டில் 118 மிலியன் குழந்தைகள் உலகில் பிறந்திருக்கின்றன; அதே காலத்தில் 49 மிலியன் குழந்தைகள் இறந்திருக்கின்றன; அதாவது, 225 குழந்தைகள் பிறந்தால் 93 குழந்தைகள் இறந்திருக்கின்றன.

இந்த அடிப்படையில் பார்த்தால், ஒவ்வொரு நிமிடத்திற்கும் 132 குழந்தைகள் பிறக்கின்றன!

'சோகித்—காங்கிரசுப் பிடியிலிருந்து பீகாரைக் காப்பாற்றுங்கள்'

ஐக்கிய முன்னணிக் கட்சிகள் கோரிக்கை

மாநிலமெங்கும் கண்டன நாள் கூட்டங்கள்

பாட்னு, மார்ச் 11—பீகார் ஐக்கிய முன்னணியைச் சேர்ந்த சம்யுக்த சோஷலிஸ்டு, பிரஜா சோஷலிஸ்டு, ஜனசங்கம், கம்யூனிஸ்டு, பாரதீய கிரந்திதளம், ஜார்கண்ட் ஆகிய கட்சிகள், நாளை, 'பீகாரைக் காப்பாற்றும நாள்' கொண்டாட இருக்கின்றன.

முன்னுள் பீகார் முதலமைச்சரும், ஐக்கிய முன்னணியின் தலைவருமான திரு. மகாமாயா பிரசாத், இதுபற்றிக் கூறியதாவது:-

நாளை மாநிலம் முழுவதிலும் பொதுக்கூட்டங்கள் நடத்தி, அந்தக் கூட்டங்களில் தீர்மானம் நிறைவேற்றப்படும்.

'பாவச் செயலினின்றும் பிறந்த மோசமான சோகித்—காங்கிரசுக் கூட்டின் அருவருப்பான பிடிப்பிலிருந்து இந்த மாநிலத்தைக் காப்பாற்ற வேண்டும்' என்று தீர்மானம் நிறைவேற்றப்படும்.

வியட்நாம் போர் முனையில் யானைகளுக்கும் பங்கு!

அமெரிக்கப் படையினருக்கு ஒரு பெரும் சோதனையாக இருக்கும் 'வியட்காங்'குகளுக்கு ஆயுதத் தளவாடங்களை யாரும் அறியாமல் 'பரிமாறும்' பணியில் யானைகளும் ஒத்துழைக்கின்றனவாம்!

இதனை அறிந்த அமெரிக்கப் படையினர், அண்மையில் ஒரு யானைக் கூட்டத்தைத் தாக்கியிருக்கின்றனர்! போர் விமானக் குண்டுவீச்சில் பாதிக்கப்பட்டது ஒரு யானை மட்டுந்தானும்!

போர்க் களத்திற்கு மேலும் 2-இலட்சம் அமெரிக்கப் படைகள்?

வியட்நாம் போர்க்களத்திற்கு மேலும் 2,06,000 அமெரிக்கப் படைகளை அனுப்பிவைக்குமாறு வியட்நாமில் உள்ள அமெரிக்கத் தளபதி, அதிபர் ஜான்சனிடம் கேட்டுக்கொண்டிருக்கிருராம்!

தற்போது வியட்நாமில் 5,10,000 அமெரிக்கப் படைகள் உள்ளனவாம்!

"எதிரிகளின் முக்கியமான தளங்களையும், ஊடுருவல் வழிகளையும் சீர்குலைப்பதற்கு லாவோசிலும், கம்போடியாவிலும் அமெரிக்கப் படைகள் புகுந்து நடவடிக்கை எடுக்கவேண்டும்" என்று அமெரிக்கத் தளபதி யோசனை கூறியிருக்கிருராம்.

40,000 பொறியர்கட்கு வேலையில்லை!

டில்லி அமைச்சர் தரும் அவலச் செய்தி

வேலை தேடி வெளிநாட்டுக்குச் செல்ல ஊக்கமளிக்கப்படுமாம்

புதுடில்லி, மார்ச் 10—"தற்போது வேலையில்லாமல் இருக்கும் பொறியர்கள் எண்ணிக்கையில் 25 சதவிகிதத்தினருக்கு (சுமார் 12,000-பேர்) இரண்டு அல்லது மூன்றுண்டுகளில் வேலை தேடிக் கொடுத்தாக வேண்டியிருக்கும்"

என்று கல்வியமைச்சர் திரிகுண சென் தெரிவித்தார்.

அனைத்திந்திய வானெலிக்கு அவர் அளித்த பேட்டியொன்றில் கூறியதாவது:—

"மொத்தம் 40,000 பொறியர்கள் வேலையில்லாதிருப்பதாகக் கணக்கிடப்படுகிறது; இவர்களில் உடனடியாக 25 சதவிகிதத்தினருக்குப் பல்வேறு இடங்களிலும் வேலை தேடிக் கொடுத்துவிட முடியும்; குறிப்பாகப் பாதுகாப்புத் துறையில் ஆயிரக்கணக்கான வேலைகள் காலியாக உள்ளன."

வேலைக்கு ஆட்களை எடுப்பதில் உள்ள விதிகளினுல் ஏற்படும் காலதாமதத்தைத் தவிர்க்க மற்ற அமைச்சர்களுடன் தாம் பேச்சு நடத்துவதாக அவர் கூறினுர்.

"சிறு தொழில்களைத் துவக்கி நடத்த விரும்பும் பொறியர்கட்குத் தாராளமாகப் பணவுதவி வழங்குவதற்கும் ஏற்பாடுகள் நடைபெற்றுவருகின்றன" என்ருர்.

வளர்ச்சியடைந்துவரும் பிற ஆசிய, ஆப்பிரிக்க நாடுகளுக்குப் பயிற்சி பெற்ற பொறியர்கள் தேவைப்படுவதால் அங்கே செல்ல விரும்பும் பொறியர்கட்கு ஊக்கம் அளிக்கவும் அரசு முன்வந்திருப்பதாகக் கூறினுர்.

பொறியியல் கல்லூரிகளில் மாணவர்களைச் சேர்ப்பதில் 30 சதவிகிதம் குறைக்கப்பட வேண்டும் என்று தமது அமைச்சுத் துறை பரிந்துரைத்திருப்பதாகவும் கூறினுர்.

நம்நாடு

ஆசிரியர்: இரா.செழியன் எம்.ஏ.

திருவள்ளுவராண்டு 1999 மாசி 28 (11—3—68) திங்கள்

புதுவை அமைச்சரவையின் ஆயுட்காலம்?

யூனியன் பிரதேசமான பாண்டிச்சேரியில் காங்கிரசு அமைச்சரவைதான் செயல்பட்டுவருகிறது. இதுவரை பரூக் மரைக்காயர் அவர்களை முதலமைச்சராகக் கொண்ட அமைச்சரவை இருந்து வந்தது.

இப்பொழுது, முதலமைச்சர் பரூக் உட்பட அமைச்சரவையை ஆட்சிப் பொறுப்பிலிருந்து வெளியேற்றிவிட்டு, ஏற்கனவே முதலமைச்சர் பொறுப்பிலிருந்து வெளியேற்றப்பட்ட வெங்கடசுப்பா ரெட்டியார் அவர்களை முதலமைச்சராகக் கொண்ட அமைச்சரவையை அவ்விடத்தில் அமர்த்தப்பட்டிருக்கிறது. இம்மாறுபாடு, காங்கிரசுக் கட்சி மேலிடத்தின் ஆணைப்படி முன்னாள் அனைத்திந்தியக் காங்கிரசுத் தலைவர் காமராசர் அவர்களின் தீர்ப்புக்கிணங்கச் செய்யப்பட்டிருக்கிறது.

பரூக் அவர்களை முதலமைச்சர் பதவியிலிருந்து விலக்கிவிட்டு, மீண்டும். வெங்கடசுப்பா ரெட்டியார் அவர்களை முதலமைச்சராக ஆக்கவேண்டும் என்ற முயற்சியை, காங்கிரசுக் கட்சியைச் சேர்ந்த சட்டமன்ற உறுப்பினர்களில் சிலர் சில நாட்களுக்குமுன் மேற்கொண்டனர். அம்முயற்சிக்கு, அப்பொழுது காமராசர் உடன்பட மறுத்துவிட்டார்.

ஆனால், தங்கள் கோரிக்கையை ஏற்றுக்கொள்ள காமராசர் மறுத்துவிட்டாரே என்பதற்காக, 'முன்னாள் முதலமைச்சரை மீண்டும் முதலமைச்சராக ஆக்கவேண்டும' என்ற விருப்பத்தையும் முயற்சியையும் கைவிட்டுவிடவில்லை—முன்னர் முயற்சித்த அதே காங்கிரசுக் கட்சியைச் சேர்ந்த சில சட்டமன்ற உறுப்பினர்கள்.

மேலும் தொடர்ந்து, முதலமைச்சர் மாற்றத்துக்காக அவர்கள் தீவிரமாக முயற்சிக்கலாயினர். அவர்களுடைய முயற்சிக்கு இப்பொழுது வெற்றி கிட்டியுள்ளது.

முதலமைச்சர் மாற்றம் கோரி சட்டமன்ற உறுப்பினர்களில் சிலர் முதல் முறையாக முயற்சித்தபொழுது, அதற்கு ஒப்பமறுத்துவிட்ட காமராசர், அதே உறுப்பினர்களின் மறுமுயற்சிக்கு உடன்பட்டது வியப்புக்குரியதாகும்.

முதலமைச்சராக இருக்கின்ற பரூக் அவர்களை மாற்றக்கூடாது என முதற்கண் பிடிவாதமாக மறுசதுவிட்ட அதே காமராசர், இரண்டாம் முறையாக மேற்கொள்ளப்பட்ட அதே முயற்சிக்கு எந்தக் காரணத்தைக் கருதி உடன்பட்டார்? தாம் கையாண்ட இரண்டு முரண்பட்ட முடிவுகளுக்கும் அடிப்படைக் காரணமாக அமைந்துள்ள அரசியல் சூழ்நிலைதான் என்ன?

வெங்கடசுப்பா ரெட்டியார் அவர்கள் முதலமைச்சராக இருந்த நேரத்தில், 'அப்பதவியிலிருந்து அவரை வெளியேற்றிவிட வேண்டும்' என, காங்கிரசுக் கட்சியைச் சேர்ந்த சட்டமன்ற உறுப்பினர்களிலேயே சிலர் போர்க் கொடி உயர்த்தினர். அவ்வாறு போர்க் கொடி உயர்த்தியவர்களுக்கு மகிழ்ச்சியூட்ட, முதலமைச்சர் பதவியிலிருந்து வெங்கடசுப்பா ரெட்டியார் வெளியேற்றப்பட்டு, அதுவரையில் சட்டமன்றத் தலைவராக இருந்துவந்த பரூக் அவர்கள், அப்பதவியில் அமர்த்தப்பட்டார்.

அந்த நேரத்தில், வெங்கடசுப்பா ரெட்டியார் அமைச்சரவை மீது நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை எதிர்க் கட்சியினர் கொண்டுவந்திருந்தனர். இவ்வேற்பாடு, அவரை முதலமைச்சர் பதவியிலிருந்து வெளியேற்றிவிட வேண்டும் என விரும்பிய காங்கிரசு அதிருப்தியாளர்களுக்கு, கிடைத்தற்கரிய வாய்ப்பாக அமைந்தது. எதிர்க் கட்சியினர் கொண்டுவந்திருந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்துக்குத் தாங்களும் ஆதரவு தரப்போவதாக மிரட்டி, வெங்கடசுப்பா ரெட்டியாரைப் பதவியிலிருந்து வெளியேற்றுவதில் காங்கிரசு அதிருப்தியாளர்கள் வெற்றி கண்டனர்.

எதிர்க் கட்சியினர் தாக்குதலிலிருந்து காங்கிரசு ஆட்சியைக் காப்பாற்றிக் கொள்ளுவதற்காக, அப்பொழுது முதலமைச்சராக இருந்துவந்த வெங்கடசுப்பா ரெட்டியார் அவர்களைப் பலியிட்டது, காங்கிரசு மேலிடத்தின் அரசியல் 'அறநெறி'யாக இருக்கலாம்; ஆனால், இப்பொழுது அதே வெங்கடசுப்பா ரெட்டியாரை மறுபடியும் முதலமைச்சராக ஆக்குவதற்காக முதலமைச்சராக இருந்துவந்த பரூக் அவர்களைப் பலியிடவேண்டியது, எதைக் காப்பாற்றிக் கொள்ளுவதற்காக என்பதுதான் தெரியவில்லை.

காமராசர் எடுத்த முடிவில், முதலமைச்சர் பதவியிலிருந்து பரூக் விலகிக்கொண்டு, அப்பதவியில் வெங்கடசுப்பா ரெட்டியார் அமர்த்தப்பட வேண்டும் என்பது முதற்பகுதி; இரண்டாம் பகுதி, பரூக் அவர்கள் முதலமைச்சராக ஆவதற்குமுன் இருந்துவந்த சட்டமன்றத் தலைவர் பதவிக்கு மறுபடியும் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும் என்பதாகும்.

காமராசர் முடிவில் முதற் பகுதிதான் இப்பொழுது செயலாற்றப்பட்டிருக்கிறது; ஆனால், அம்முடிவின் இரண்டாம் பகுதி செயலாற்றப்படும் என்பதற்கு உறுதி இல்லை.

காமராசர் முடிவின் முதற்பகுதிக்குத்தான் தாம் கட்டுப்பட முடியும்; அம்முடிவின் இரண்டாம் பகுதிக்குத் தாம் கட்டுப்பட வேண்டும் என்பது கட்டாயமல்ல---என, பரூக் அவர்களே அறிவித்திருப்பதாக ஏற்கனவே செய்தி தரப்பட்டிருக்கிறது. பரூக் அவர்களின் இப்போக்கு உண்மையானதாக இருந்திடும்பட்சத்தில், தாம் முதலமைச்சர் பொறுப்பிலிருந்து போதிய நியாயமான காரணமில்லாமல் விலக்கப்பட்டிருப்பதாக பரூக் அவர்கள் தீர்மானித்துக் கொண்டிருக்கின்றார் என்றும், திட்டமிட்டுத் தமக்கு இழைக்கப்பட்ட தீமையாகக் கருதுகிறார் என்றும், நாம் முடிவுகட்டிக் கொள்ளலாம். இம்முடிவின்படி, பாண்டிச்சேரியின் சட்டமன்றக் காங்கிரசுக் கட்சிக்குள்ளாகப் புதிய பிணக்கும் பிளவும் தலைவிரித்தாடுகிறது என்பது தெளிவாகிறது.

பாண்டிச்சேரி சட்டமன்றக் காங்கிரசுக் கட்சிக்குள் சிறிது காலமாகத் தணிந்து இருந்த பிளவும் பிணக்கும், மறுபடியும் தலைவிரித்தாடத் துவங்கிவிட்டது என்ற உண்மையை உறுதிப்படுத்த, அமைச்சர்கள்பதவியேற்புச் சடங்கில், பதவி விலகிய பரூக் உள்பட மொத்தத்தில் 11 காங்கிரசு சட்டமன்ற உறுப்பினர்கள் கலந்துகொள்ளாமல், புதிய அமைச்சரவை பதவியேற்பில் தங்களுக்குள்ள அதிருப்தியை வெளிப்படுத்திக் கொண்டுள்ளதே போதுமான சான்றாகும்.

வெங்கடசுப்பா ரெட்டியார் அவர்களை முதலமைச்சராகக் கொண்டு உருவாகியிருக்கின்ற காங்கிரசு அமைச்சரவை அடுத்த தேர்தல் வரையில் இல்லை என்றாலும், இத்திங்கள்—அதாவது மார்ச்சு திங்கள் இறுதி வரையிலாவது உயிர் பிழைத்திருக்குமா என்பதை, இப்பொழுது உறுதியாகக் கூறுவதற்கில்லை. அந்த அரசாங்கத்தின் வரவு - செலவுத் திட்டம், வருகின்ற சனிக்கிழமையன்று சட்டமன்றத்தில் கொண்டுவரப்படவிருக்கிறது. ஏற்கனவே இருந்துவந்த வெங்கடசுப்பா ரெட்டியார் அமைச்சரவை பதவியை விட்டு வெளியேறுவதற்கு மூலகாரணமாக இருந்துவந்தவர் எனக் கொள்ளப்பட்டுள்ள காங்கேயன் அவர்கள், புதிய அமைச்சரவையின் நிதியமைச்சர் என்ற முறையில், வரவு - செலவுத் திட்டத்தை சட்டமன்றத்தில் வழங்க இருக்கின்றார்; இந்த நேரத்தில், எதிர்க் கட்சியினரோடு சேர்ந்துகொண்டு, புதிய அமைச்சரவை பதவியேற்பில் பங்குகொள்ள விரும்பாது ஒதுங்கியிருந்த காங்கிரசு அதிருப்தியாளர்கள், திட்டத்துக்கு எதிராக வாக்களிக்கத் துணிந்தால், இப்புதிய அமைச்சரவை கவிழ்ந்துவிடக்கூடிய அபாயம் தலைதூக்கியிருக்கிறது.

முதலமைச்சராகப் பதவிபெற்ற வெங்கடசுப்பா ரெட்டியார் அமைத்திருக்கின்ற இப்புதிய அமைச்சரவையில், ரெட்டியார் அவர்களின் பழைய அமைச்சரவையில் நிதி அமைச்சராக இருந்து வந்த சாங்கேயன் அவர்கள்தான், அதே நிதி அமைச்சர் பொறுப்பைப் பெற்றுள்ளார். அப்பொழுது நிதி அமைச்சர் பதவியைவிட்டு விலகியதுடன் இல்லாமல், காங்கிரசுக் கட்சியையும்விட்டு விலகி எதிர்க் கட்சியில் சாங்கேயன் சேர்ந்துகொண்டார். மறுபடியும் அவர் இப்பொழுது காங்கிரசுக் கட்சியில் சேர்த்துக்கொள்ளப்பட்டிருக்கின்றார் என்பதுடன், நிதி அமைச்சர் பதவியிலும் அமர்த்தப்பட்டிருக்கின்றார்.

கட்சிவிட்டு கட்சி மாறுவதுகுறித்து அனைத்திந்தியக் காங்கிரசு செயற்குழு, கண்டித்தும் வருந்தியும் தீர்மானம் போட்டிருப்பதையும், குறிப்பிடக்கூடிய காங்கிரசுப் பெருந் தலைவர்கள் அனைவரும், இப்படி வேலி தாண்டுவதைக் கண்டித்துப் பேசிக்கொண்டு இருப்பதையும், இப்படி ஒரு கட்சியிலிருந்து மற்றொரு கட்சிக்குக் குடிபுகுவதைச் சட்டத்தினால் தடை செய்யமுடியுமா என ஆராய்ந்து கொண்டிருப்பதையும் அடியோடு மறந்துவிட்டு, காங்கேயன் அவர்களை மீண்டும் காங்கிரசுக் கட்சிக்குள் அணைத்துக்கொண்டது மட்டுமல்லாமல், அவரையே அமைச்சர்களில் ஒருவராக ஏற்றுக் கொண்டிருப்பதும் முறைதானா? 'மாமியார் உடைத்தால் மண் குடம்; மருமகள் உடைத்தால் பொன் குடம்' என்ற மொழிக்கு ஒப்பாக அல்லவா இந்த நிகழ்ச்சி அமைந்திருக்கிறது?

கட்சிவிட்டுக் கட்சி மாறுவதைக் குறித்துக் காங்கிரசு மேலிடம் விடுகின்ற கண்ணீர்உண்மைக்கு முழுவதும் மாறானது—போலியானது என்பதற்கு, காங்கேயன் அவர்கள் அமைச்சர் பதவி பெற்றுள்ள அரசியல் கதையே போதுமானதாகும்!

—கா. க.

திரைப்பட அரங்கில் திடீர்ச் சோதனை

அமைச்சர் முத்துசாமி வெளியிட்ட தகவல்

சென்னை, மார்ச் 7— சட்டமன்றத்தில், திரைப்பட அரங்கு உரிமையாளர்கள் கேளிக்கை வரி ஏய்ப்புக் குறித்துக் கேள்விகள் எழுந்தபோது, காங்கிரசுக் கட்சிக் கொறடா கே. விநயகம் எழுந்து, அமைச்சர் மதியழகனைப் பார்த்து,

"அதிகாரிகள் திடீரென்று திரைப்படக் கொட்டகைகளுக்குச் சென்று பரிசோதனை நடத்துவதைவிட அமைச்சரே சென்று பரிசோதனை செய்தால் நல்ல பலன் ஏற்படுமே; அப்படி எப்போதாவது அமைச்சர் சோதனை நடத்தினரா? இனி நடத்துவாரா?" என்று கேட்டார்.

உடனே உள்ளாட்சித்துறை அமைச்சர் மா. முத்துசாமி எழுந்து பின்வருமாறு கூறினர்:—

"நான் சுற்றுப்பயணம் சென்றிருந்த சில இடங்களில் அப்படித் திடீரென்று சென்று பார்த்திருக்கிறேன்; நான் பார்த்த கொட்டகைகளிலெல்லாம், அவை, 'சுகாதார முறைப்படி இயங்குகின்றனவா' என்றும், 'வேறு ஏதேனும் குறைபாடுகள் உள்ளனவா' என்றும் கவனித்தேன்; எல்லாம் நன்றாகவே இருந்தன; ஓர் இடத்தில் மட்டும் ஐந்து பேர் டிக்கெட் இல்லாமல் படம் பார்த்துக் கொண்டிருந்ததைக் கண்டுபிடித்தேன்; அது பற்றிக் கேட்டதற்கு, 'அவர்கள் கொட்டகை உரிமையாளரின் சொந்தக்காரர்கள்' என்று எனக்குச் சமாதானம் சொல்லப்பட்டது; இருந்தாலும், அது பற்றி தக்க நடவடிக்கை எடுக்குமாறு அதிகாரிகளிடம் கூறிவந்தேன்."

திரைக் காட்சி வரி ஏய்ப்புத் தடுப்பு

தமிழக அரசின் நடவடிக்கைகள்

திரைப்பட மாளிகை உரிமையாளர்கள், போலி நுழைவுச் சீட்டுகளை விற்பதன் மூலம் கேளிக்கை வரி செலுத்தாமல் ஏய்ப்பதைத் தடுப்பதற்காக அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள்:—

வாணிக வரித்துறை அதிகாரிகள், வருவாய்த்துறை, போலீசுத் துறைகளைச் சேர்ந்த அதிகாரிகள், குறிப்பிட்ட உள்ளாட்சி மன்றங்களில் இதற்கெனத் தனி அதிகாரம் பெற்றுள்ள நிர்வாகச் சிறப்பு அதிகாரிகள் சிலர்—ஆகியோர் திரைப்பட மாளிகைகளுக்கு இயன்ற வரையில் அடிக்கடியும் முன்னறிவிப்புஇன்றியும் சென்று பார்வையிடுதல்.

1939-ம் ஆண்டு தமிழகக் கேளிக்கை வரிச் சட்டத்தின் கீழ் வரி செலுத்தாமல் ஏய்ப்பதைக் கண்டுபிடிக்க உதவியாகத் தகவல் அளிக்கிற தனிப்பட்டோருக்கும், வாணிக வரித்துறை ஏவலர்களுக்கும் பரிசுகள் வழங்குதல்.

தனிப்பட்டவர்களுக்குப் பரிசுகள் வழங்கப்படுவது குறித்து திரைப்பட மாளிகைத திரையில் அறிவிப்புகள் காட்டுதல்.

தமிழக அரசுச் சின்னத்தை மையத்தில்கொண்ட முக்கோண வடிவுள்ள ஒரு புதிய உலோக முத்திரையைக் கேளிக்கை வரி அதிகாரிகள் பயன்படுத்தல்.

நுழைவுச் சீட்டுகளில் முத்திரையிடுவதற்காக, அஞ்சல்-தந்தித் துறையினர் பயன்படுத்துவதைப் போன்று முத்திரையிடுவதற்கான தனிமையையும் உலோக மையொற்றியையும் செங்கற்பட்டு மாவட்டத்தில் முதற்கண் முன்னோடி முறையில் பயன்படுத்தல்.

1939-ம் ஆண்டு தமிழகக் கேளிக்கை வரிகள் சட்டத்தில் கீழ்க்கண்டவற்றிற்கு வகை செய்யப்பட்டுள்ளது:—

கேளிக்கைகளுக்கு அனுமதிக்கப்படுவதற்காகக் கொடுக்கப்படுகிற கட்டணங்கள்மீது மேற்படி சட்டத்தின் 4, 4-ஏ பிரிவுகளின் கீழ்ச் செலுத்த வேண்டிய கேளிக்கை வரி செலுத்தப்படாமல் ஏய்க்கப்படும் நேர்வுகளில் எவ்வளவு கேளிக்கை வரித் தொகை செலுத்தப்பட வேண்டும் என்பதை வரி விதிப்பு அதிகாரி தமக்குத் தகுதியெனத் தோன்றும் வகையில் மதிப்பிடுதல்.

அபராதத் தொகையை, மேற்படி சட்டத்தின்கீழ்ச் சேர வேண்டிய தொகையாக வசூலித்தல்.

மேற்படி சட்டத்தின்கீழ் ஒரு குற்றம் புரிபவருக்கு விதிக்கப்படும் தண்டனையே அக்குற்றம் புரிவதற்கு உடந்தையாக இருந்தவருக்கும் விதிக்கப்படுதல்.

கீழ்க்கண்டவற்றிற்காக 1955-ம் ஆண்டு தமிழகத் திரைப்படக் காட்சிகள் (விதிமுறைகள்) சட்டத்தில் வகை செய்யப்பட்டுள்ளது:—

1939-ம் ஆண்டு தமிழகக் கேளிக்கை வரிச் சட்டத்தின்கீழ் ஒரு குற்றத்திற்காக ஒருவர் தண்டிக்கப்பட்டிருந்து, அவர் தண்டிக்கப்பட்டதிலிருந்து இரண்டாண்டுகள் முடிந்திருந்தாலன்றி மற்றபடி, அவருக்கு உரிமம் வழங்காதிருப்பது;

1939-ம் ஆண்டு தமிழகக் கேளிக்கை வரிச் சட்டத்தின் 14-வது பிரிவின்கீழ் ஒரு குற்றத்திற்காகத் தண்டிக்கப்பட்டுள்ள ஓர் உரிமைதாரரது உரிமத்தின் செயல்திறனை நீக்கிவிடுதல் அல்லது நிறுத்தி வைத்தல்.

மேற்கண்ட இவ்விவரங்களை, வருவாய்த்துறை அமைச்சர் திரு. கே. ஏ. மதியழகன், சட்டமன்றத்தில், கழக உறுப்பினர்கள் எஸ். இராமச்சந்திரன், என். கிட்டப்பா ஆகியோர் கேட்டிருந்த கேள்விக்குப் பதிலாக எழுத்து மூலம் தெரிவித்தார்.

மேலும் பல துணைக் கேள்விகட்கு அவர் பதிலளிக்கையில் கூறியதாவது:—

"கேளிக்கை வரியில், அதை வசூலிப்பதற்காக ஆகும் செலவு போக மிச்சமுள்ள தொகை முழுவதும் (அதாவது 90 சதவிகிதம்) அந்தந்த ஊர்களின் நன்மைக்காகவே உள்ளாட்சிமன்றங்களிடம் வழங்கப்பட்டு விடுகிறது; எனவே, வரியை ஏய்க்காமல் இருக்க பொதுமக்களும் ஒத்துழைக்க வேண்டும்.

"வரி ஏய்க்கப்படுகிறதா என்பதைத் திடீரென்று சென்று பரிசோதிக்கும் அதிகாரம் உள்ளாட்சிமன்றங்களின் ஆணையாளர்களுக்கும், தாசில்தார்களுக்கும் இருந்தபோதிலும், வணிக வரித் துறைத் துணை அதிகாரிதான் இந்தப் பணியைச் செய்து வருகிறார்.

"படம் பார்ப்பவர்கள் கையில் கிழிக்கப்பட்ட பாதி டிக்கெட் இல்லாமல் இருந்தால் அவருக்கு ரூ. 500 வரை அபராதம் விதிக்கவும் சட்டம் இருக்கிறது.

"வரி ஏய்ப்பவர்கள் பல தந்திரங்களைக் கையாளுகிறார்கள்; போலிக் கணக்குக் காட்டுதல்—பணத்தைப் பெற்றுக் கொண்டு டிக்கெட்டு இல்லாமலே பார்க்கச் செய்தல்—கள்ள முத்திரை தயார் செய்தல்—முத்திரையில்லாமலே டிக்கெட் மாற்றல்—விற்ற டிக்கெட்டையே மீண்டும் விற்றல்—கிழிக்கப்பட்ட டிக்கெட்டை விற்றல் இப்படிப்பட்ட முறைகளிலும் ஏமாற்றுகிறார்கள்.

"இப்படிப்பட்டவர்களுக்கெல்லாம் மேலும் கடுமையான தண்டனை கொடுக்க இந்த மன்றம் விரும்பினால், அதற்கான வகையில் சட்டம் இயற்றவும் இந்த அரசு தயாராக இருக்கிறது."

மேலவையில் கருத்து மழை .... நேசக் கரம் .... தோழமைக் குரல் !

தமிழகம் இந்தியாவை ஆளும் காலம்....!

[எஸ். ஆர்.]

சட்டமன்ற மேலவைக் கூட்டத்தில் உரையாற்றியிருக்கும் இரு தலைவர்களின் பேச்சுக்கள், மன்றத்தின் பெருமையினைப் புதிய புகழுக்குக் கொண்டு செல்வதாக அமைந்திருக்கின்றன !

அங்கு அறிஞர் அண்ணா அவர்கள், அவை முன்னவர் !

திரு. கே. இராஜாராம், அந்த மன்றத்தில், எதிர்க் கட்சித் தலைவர் !

மேலவை என்றாலே பலவிதங்களில் தனிச் சிறப்புடையது; அதிலும், தமிழகச் சட்டமன்றத்தின் மேலவையில் மற்றுமொரு தனிச் சிறப்பு உண்டு.

மாநிலத்தினை ஆளும் கழகம், அங்கே சிறுபான்மை !

பேரவையில் சிறுபான்மையாக இருக்கும் காங்கிரசு, மேலவையில், எண்ணிக்கையில் பெரும்பான்மை; ஆனால் இருப்பிடத்தினால் எதிர்க் கட்சியே !

பெரும்பான்மையாக இருந்தும் எதிர்க் கட்சியில் இருப்பதனால் தானோ என்னவோ—காங்கிரசின் தலைவர் கே. இராஜாராம், கட்சி வேறுபாடு கடந்து பொதுவாகச் சில கருத்துக்களை—யோசனைகளை—பாராட்டுதல்களை இதயம் திறந்து வழங்கியிருக்கிறார் !

'கண்கள் சந்தித்துக்கொண்டால் வாய்மொழிக்கு வேலையில்லை' என்று கூறுவார்கள் ! பொதுப் பிரச்சினைகளிலும் கட்சி வேறுபாடு கடந்த உணர்வுகள் பிறந்துவிட்டதெனில், அங்கே, தூய உள்ளங்களின் சொல் பரிமாற்றங்களைக் காணலாம் !

இரு தினங்களுக்குமுன், சட்டமன்றப் பேரவைக் கூட்டத்தில் ஆற்றிய பதிலுரையில், 'மத்திய அரசு, தமிழகத்துடன் நல்ல முறையிலேயே உறவு கொள்கிறது' என முதலமைச்சர் பேசியது, மேலவை எதிர்க் கட்சித் தலைவருக்கு மனநிறைவினைக் கொடுத்திருப்பதனை, அவரது உரையில் தெளிவுபடுத்தியிருக்கிறார். அது மட்டுமல்ல; என்ன வேறுபாடு இருந்தாலும் அவைகளை ஒதுக்கி வைத்துவிட்டு, 'மாநிலத்தின் முன்னேற்றத்துக்கு ஒத்துழைக்கத் தயார்' என்ற நேசக் கரத்தினையும் நீட்டியிருக்கிறார் !

அவரது இந்த ஒப்புதல், 'கட்சி முழுமைக்கும்தான்' என்பதனை, காங்கிரசுக்காரர்கள் உணரவேண்டும்.

கழக நிர்வாகம் பொறுப்பேற்றதுமுதல் நடைபெற்றிருக்கும்—நிகழ்ந்திருக்கும் துப்பாக்கிப் பிரயோகங்கள்பற்றிய ஒரு பெருந்தன்மையான மதிப்பீடும், திரு. இராஜாராம் அவர்களிடமிருந்து கிடைத்திருக்கிறது.

'சுடும் உத்தரவு அமைச்சர்களிடமிருந்து அனுப்பப்படவில்லை; 'ஒவ்வொரு சம்பவமும், கட்டுக்கு மீறிய நிலையில்—வேறு வழி இல்லாத நிலையில்தான் நடந்திருக்கிறது' என்பதனை அவர் தெளிவுபடுத்தியிருக்கும் உணர்வுகள், 'காங்கிரசுக்காரர்களின் பேச்சு—எழுத்து இரண்டிலும் இனிவரும் நாட்களில் தென்படுமா' என்பதனைப் பொதுமக்கள் கவனிக்கவே செய்வார்கள்.

துப்பாக்கிச் சூடுபற்றி நடுநிலையுடன் தெரிவித்திருக்கும் அவரது கருத்துக்கள், 'பொதுப் பிரச்சினைகளில், கட்சியின் ஒத்துழைப்பினைத் தருகிறேன்' என முன்பே கூறியிருக்கும் உறுதிப்பாட்டுக்கு மெருகு சேர்க்கிறது !

தமிழகத்தில் காணப்படுவதாகச் சட்டமன்றப் பேரவையிலும், வெளியே பொது மேடைகளிலும் காங்கிரசுக்காரர்கள், கிளிப் பிள்ளைகள்போல் திரும்பத் திரும்பக் கூறும் தொழில் துறை அமைதியின்மை—உற்பத்திக் குறைவு ஆகிய இரண்டும், 'கடந்த இரண்டு ஆண்டுகளாகவே நாடு முழுவதிலும் இருப்பவைதான்' என்பதனை, அவர்களது கட்சியின் தலைவர் இராஜாராம் மேலவையில் விளக்கியிருப்பதனை, அவர்கள்தான் 'ஜீரணி'க்க வேண்டும் !

எதிர்க் கட்சித் தலைவர் காட்டியிருக்கும் இத்தகைய பொறுப்புணர்ந்த தன்மை—ஒத்துழைப்பு—முதலமைச்சர் அண்ணா அவர்களை நெகிழ்வித்திருப்பதில் ஆச்சரியம் ஏதும் இல்லை; அதனால் அவர், அதனினும் பல படிகள் மேலே சென்று,

> **"'அரசுடன் எதிர்க் கட்சி ஒத்துழைப்பது தவறு' என்று கூறுவார் எவரும் இருக்கமுடியாது; மாநிலத்தின் முன்னேற்றத்துக்கான யோசனைகளை கழகத்துக்காரர்களிடமிருந்து பெறுவதைவிட, காங்கிரசுக்காரர்களிடமிருந்து பெறுவதனையே அதிகம் விரும்புகிறேன்"**

என்றவகையில் தமது உளத் தூய்மையினை எடுத்துக்காட்டியுள்ளார் !

அண்ணா அவர்களின் நேற்றைய மேலவைப் பதிலுரையில், இந்தியக் கூட்டாட்சி பற்றியும், துணைக்கண்டத்தின் பொருளாதார நிலை பற்றியும் குறிப்பிட்டிருப்பது, மற்றொரு பேருரையாகத்தான் இருக்கிறது.

மத்திய அரசின் சிந்தனைகளுக்கு வித்தாக அமையக்கூடிய பொதுவான யோசனைகளை, எந்த ஒரு காங்கிரசு முதலமைச்சரும் கூட இதுவரையில், இத்தகைய மென்மைப் போக்கில்—அதுவும் அரசியல் கட்சிகள் இடம் பெற்றிருக்கும் சட்டமன்ற உரைகளில்—எடுத்துக் கூறியிருப்பதாகச் சான்றுகள் ஏதும் காணோம் !

இந்திய அரசின் மொத்த வருவாயில் ரூ. 1,015 கோடியை இராணுவச் செலவுக்கு ஒதுக்கியிருக்கும் புதுடில்லியை, 'பாதுகாப்புக்கு இவ்வளவு தொகையா?' என்று மட்டும் கேட்டு நின்றுவிடவில்லை அண்ணா அவர்கள்—

> "நமது வருமானத்திலிருந்து ஒரு பெரும் தொகையினை ஒதுக்காமலே இராணுவத்தின் திறமையினைப் பயன்படுத்த இயலும்" என்று 'நாசூக்காக'க் கூறியதுடன், யோசனை ஒன்றினையும் வழங்கியிருக்கிறார்; 'பாகிஸ்தான், சீனா ஆகிய இரண்டின் மூலமும் எப்போதும் இருக்கும் ஆபத்துக்களை உணர்ந்த நிலையில்தான் இந்த யோசனையைத் தெரிவிக்கிறேன்' என கூறியிருக்கும் அண்ணா அவர்கள், 'இந்தியாவைவிடச் சில பல வகைகளில் சக்தி வாய்ந்த—புதுமையான ஆயுத வசதிகளைப் பெற்றிருந்தும் பாகிஸ்தான் நம்மிடம் தோற்றதேன்? எனவே, சொந்த நிதியிலிருந்து பணத்தை ஒதுக்கிடுவது மட்டும் பாதுகாப்பு உத்தரவாதத்துக்கு வழிகாட்டிவிடாது' என்ற கண்கூடான உண்மையினை உணர்த்தியிருப்பது, ஆழமாகச் சிந்திப்பவர்களுக்கு மட்டுமே புரியக்கூடிய கருத்துரைகளாகும் !

"பாதுகாப்புச் செலவைக் குறைத்தால் மாநிலத்துக்கு இன்னும் கூடுதலாக உதவி கிடைக்குமே என்ற எண்ணத்தில் மட்டும் முதலமைச்சர் இவ்வாறு கூறியிருப்பதாகக் குறுகிய பொருளில் நினைப்பதில் பயனில்லை ! 'இந்தியப் பாதுகாப்பு அமைப்பு எப்படி—எந்த வகையில் நிறைந்த பயனைக் கொடுக்கும்' என்ற யோசனையும் அவரது உரையில் இருப்பதுதான் முக்கியம் !

சட்டமன்றப் பேரவையில் ஆற்றிய பதிலுரையில், ஐந்தாண்டுத் திட்டங்கள் பற்றியும், அதனுள் வீழ்ந்திருக்கும் பொருளாதார ஓட்டைகள் பற்றியும் குறிப்பிட்டிருந்ததன் தொடர்ச்சியாக, மேலவையில், மத்திய அரசின் பார்வைக்கு மூன்று வழிவகைகளை விளக்கியிருக்கிறார் முதலமைச்சர்—

★ 'மார்க்கெட்' நிலைமையை முன்கூட்டியே ஆராயாமல் ரூ. 2,000 கோடி வரையில் செலவிடப்பட்டுள்ள தொழில் அமைப்புகள்பற்றி இனியேனும் ஒரு பூர்வாங்க ஆராய்ச்சி செய்வதற்காகக் குழு அமைக்கப்படல் வேண்டும். இன்னும் எந்தவகைப் பலனும் தராத அந்தப் பொதுத்துறை அமைப்புக்கள், இனிமேலாவது இலாபம் தரும் வகையில் இயங்குமா என்பது பற்றிச் சிந்திக்க வேண்டும்.

★ பாதுகாப்புக்குக் குந்தகம் வராத வரையில் இராணுவச் செலவு குறைக்கப்படல் வேண்டும்.

★ மத்திய—மாநில அதிகார முறைகளில் உள்ள குறைபாடுகள் காரணமாக நிர்வாகத் துறைக்குச் செலவிடப்படும் கடும் இரட்டிப்புச் செலவுகளைப் பெரும் அளவுக்குக் குறைக்கலாம்.

அதிகாரங்களைக் கொடுப்பதற்கு மனம் இல்லாதது போலவே, செலவினங்களுக்கு அளிப்பதற்குப் பணம் இல்லாத நிலையிலிருந்து புதுடில்லி விடுதலை பெறுவதற்கு அண்ணா அவர்கள் காட்டியுள்ள இந்த வழிவகைகளில் 'மிரட்டலா' இருக்கிறது? 'மோதல்' உணர்வா தெரிகிறது? கழக வாடையா வீசுகிறது?

"வருவாய்க்குள் செலவினங்களை வைத்துக் கொள்ளுங்கள்; அதுவே, பற்றாக்குறை 'பட்ஜெட்' போடுவதைத் தடுக்கும்" என்று அண்ணா அவர்கள் மொரார்ஜியின் 'பட்ஜெட்' பற்றிக் குறிப்பிட்டிருப்பது, வேறொரு வகையில்—'புதிய முதலீடு இல்லையே' என்று தமிழக நிதிநிலை அறிக்கை பற்றிக் குறை கூறிய முன்னாள் அமைச்சர் ஒருவருக்குத் தந்த விளக்கமாகவும் இருக்கிறதல்லவா?

பெரும் திட்டங்கள்—பட்ஜெட் பற்றாக்குறை—புதிய வரி அல்லது புதிய கரன்சி நோட்டுக்கள்—பணவீக்கம்—விலைவாசி ஏற்றம்—இதுதான் அண்ணா அவர்கள், நாட்டுப் பொருளாதார நிலை பற்றித் தந்துள்ள கருத்தின் வரைபடம் !

ரூ. 290 கோடிக்குத் துண்டுவிழும் நிதிநிலை அறிக்கையினைத் தந்துள்ள மத்திய அரசு, அதனைச் சரிக்கட்ட நோட்டு அச்சடிக்க முனைந்தால், அதனால் ஏற்படும் விளைவுகள் மாநிலத்தின் சக்திக்கு அப்பாற்பட்டவை என்பதனை, இப்போதே சூசகமாகக் காட்டியிருக்கின்றார் அண்ணா.

"மாநிலங்களுக்கு நிர்வாகச் சிக்கனம் பற்றிப் போதிக்கும் மத்திய அரசு, அண்மையில் ஏற்படுத்தியிருக்கும் அனைத்திந்தியக் கல்வி சர்வீசு—அனைத்திந்திய சுகாதார சர்வீசு போன்றவைகளெல்லாம் ஏன்? இவையெல்லாம் மாநிலத்தில் மட்டும் இருந்தால், இரட்டிப்புச் செலவு செய்யப்படுவது தவிர்க்கப்படுமே?" என்று கேட்டுவிட்டு அண்ணா அவர்கள்,

> புதுடில்லி தனது நிர்வாகத்தில், தமிழகத்தில்
> ஏற்படுத்த விரும்பும் மாட்டுப் பண்ணை

ஒன்றினைப் பற்றிக் குறிப்பிட்டிருப்பது, சரியான நிகழ்ச்சி விளக்கமாக அமைந்திருக்கிறது !

> **"வாங்கும் சக்தி அதிகம் உள்ள இடத்தில் உணவுப் பொருட்களைக் கட்டுப்படுத்த வேண்டும்; அப்போதுதான, வாங்கும் சக்தி குறைந்த இடத்தில் உணவுப் பொருள்கள் கிடைக்கும் என்பது பொருளாதாரத் தத்துவம்"**

என்று படி அரிசித் திட்டம் பற்றி முதலமைச்சர் கொடுத்திருக்கும் அடிப்படை விளக்கம்—முன்னரே ஒருமுறை இதே பகுதியில் குறிப்பிட்டிருப்பதனைப்போல்—கட்டணம் வசூலிக்காமல் காங்கிரசுக்காரர்களுக்குச் சொல்லித் தரப்படும் பொருளாதாரப் பாடமாகும் !

"சென்னைக்கும், கோவைக்கும் மட்டும் ஏன்?" எனக் கேட்டு மற்ற பகுதியினரைத் 'தூண்டி'விடுவதுபோல் கேள்விகள் கேட்கும் காங்கிரசுக்காரர்களுக்கு—

> **"சென்னையும் கோவையும் Vulnerab'e Areas; எனவேதான், அவைகளுக்கு முதல் முக்கியத்துவம்"**

என்றும்,

> **"அதிக வாங்கும் சக்தி உள்ள இடங்களில் விலைகளை செயற்கை முறையில் கட்டுப்படுத்துவதால், வாங்கும் சக்தி குறைந்த இடத்தில் இயற்கையில் விலை குறைய வழிபிறக்கிறது"**

என்று காரணம் காட்டி, 'படி அரிசி 90 காசுக்கு விற்கும் இடங்களில் திட்டத்தை எப்போது விரிவுபடுத்தப் போகிறீர்கள் எனக் கேட்பது வேடிக்கைதான்' என்று அண்ணா அவர்கள் தந்துள்ள தெளிவுரை, 'படி அரிசி' பற்றி முழு விமரிசனங்களுக்கும் வைத்துள்ள முற்றுப்புள்ளியாகும் !

'பிரிவினை கேட்டது சழகம்தான்' என்பது முன்னைய நிலை; ஆனால், அப்போதும் சரி—இப்போதும்சரி—**'பிரிந்து போங்கள்'** என்று சொல்லுபவர்களைப் பற்றி என்ன நினைப்பது என்று கேட்கும் வகையில்—ஒற்றுமை உணர்ச்சியுடன் பிரச்சினைகளை அணுகினால்கூட, 'பிரிவினை' எனும் மனப்போக்கிலேயே அவர்கள் காட்டும் 'உபசரிப்பை', மனம் துணுக்குற்று அண்ணா எடுத்துக்காட்டியிருப்பது, 'இந்திய ஒற்றுமைக்கு எங்கே ஆக்கம் பிறக்கிறது—எங்கே ஊறு பிறக்கிறது' என்பதனை, நாட்டு மக்கள் இனியேனும் உணர்ந்துகொள்ள ஒரு சந்தர்ப்பம் கிடைத்திருக்கிறது !

ஏற்கனவே பல முறை தெளிவுபடுத்தியிருப்பதனை மீண்டும் உறுதிப்படுத்தி, 'பிரிவினை எனது எண்ணத்தில் இல்லை' என்று கூறியதுடன் நில்லாமல்,

> **"பிரிவினைக்குப் பதிலாக, இந்தியா முழுவதையுமே தமிழகம் ஆளும் காலத்தினை நம்பிக்கையுடன் எதிர்பார்க்கிறேன்"**

என்று அண்ணா அவர்கள் கூறியிருப்பது, தமிழ் கூறும் நல்லுலகத்தின் ஊன்—உயிர் ஒவ்வொன்றினையும் கிலுகிலுக்கச் செய்கிறது !

எந்த ஒரு தலைவரது அமைப்பினைத் தடை செய்வதற்குச் சட்டம் இயற்றினார்களோ, அந்தத் தலைவரே தமிழகத்தின் முதல்வராய் வந்து—'அவர் தரும் கருத்துக்களில்தான் இந்திய ஒற்றுமைக்கான வழிவகைகளே காணக் கிடக்கிறது' என்ற ஒரு நிலை இருக்கும்போது,

> 'இந்தியாவைத் தமிழகம் ஆளும்' என்ற
> அவரது சனநாயக ஆசை நிறைவேறாமலா போகும்?

பள்ளியாசிரியர்கள் நலனுக்கான ஏற்பாடுகள்

கல்வியமைச்சர் விளக்கம்

சென்னை, மார்ச் 9—

தற்செயல் விடுப்பு நீங்கலாக ஏனைய விடுப்பினைப் பொறுத்த வரையில், மானியம் பெறும் உயர்நிலைப் பள்ளிகளின் நிர்வாகிகள், விடுப்பு விதிகளைத் தங்களுக்கு ஏற்றவாறு வகுத்துக் கொள்ள அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

அரசாங்கப் பணியிலுள்ள ஆசிரியர்களுக்குத் தமிழ்நாடு அரசாங்க விடுப்பு விதிகள் பொருந்தும்.

அரசாங்கப் பள்ளிகளிலுள்ள ஆசிரியர்களுக்குப் பொருந்துகிற தாராளவிதிகளைத் தனியார் நிர்வாகத்திலுள்ள உயர்நிலைப் பள்ளிகளிலும், சிறப்புப் பள்ளிகளிலும், பயிற்சிப் பள்ளிகளிலும் உள்ள ஆசிரியர்களுக்கும் 1968—1969 முதல் பொருந்தச் செய்து, அதற்கேற்ப ஆசிரிய மானியம் கணக்கிட்டு வழங்கக் கருதப்பட்டுள்ளது.

ஆசிரியர்கள் உயர்கல்வித் தகுதிகளைப் பெற அவர்கட்கு ஊக்கமளிக்கும் வகையில், அவ்வாறு தகுதிகள் பெறும் ஆசிரியர்களுக்கு முன்கூட்டியே இரு சம்பள உயர்வுகள் வழங்கவும் கருதப்படுகிறது.

ஆசிரியர்களின் நலனைப் பொறுத்தவரையில், தமிழ்நாட்டில் உள்ள ஆசிரியர்களுக்காகச் செயல்பட்டுவரும் காப்புறுதி—வருங்கால வைப்பு நிதி—ஓய்வு ஊதியம் ஆகிய மூன்று சேம நலத் திட்டங்களைத் தவிர ஆசிரியர்களுக்கு மேலும் உதவுவதற்காக, 'ஆசிரியர் நலத்திற்கான தேசிய நிறுவன'த்தின்கீழ் நிதி வசூலிக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

1966 செப்டம்பரிலும், 1967 செப்டம்பரிலும் ஆசிரியர் நாள் சிறந்த முறையில் கொண்டாடப்பட்டது. 1966—67-ம் ஆண்டில் ரூ. 9-இலட்சத்திற்கு மேற்பட்ட தொகை'வசூலிக்கப்பட்டு, 'ஆசிரியர் நலனிற்கான தேசிய நிறுவன'த்தின்கணக்கிற்கு வரவு வைக்கப்பட்டது. 1967—68-ல், இதற்கென சுமார் ரூ. 6-இலட்சம் வசூலிக்கப்பட்டது. இன்றையத் தேதிவரையில் இதற்கென வசூலிக்கப்பட்ட தொகை ரூ. 15,04,572 ஆகும்.

'ஆசிரியர் நலனிற்கான தேசிய நிறுவன'த்தின் மாநிலச் செயற்குழு நான்குமுறை அவை கூடி, பண உதவி தேவைப்படுகிற தகுதியுள்ள ஆசிரியர்களுக்கு ஒரு மொத்தத் தொகையை மானியமாகத் திங்கள்தோறும் அளிக்க ஒப்பளிப்பு வழங்கியுள்ளது.

—(கல்வி மானியக் கோரிக்கைக் குறிப்புரை)

கொளச்சலில் புதிய கடற்கரைச் சாலை

அரசு பரிசிலிக்கும்

சென்னை, மார்ச் 8—

"கொளச்சல் 'சைமன் காலனியிலிருந்து 'நீரோடிவரையில் கடற்கரைச் சாலை அமைக்கும் திட்டத்துக்கு 1960-ல் அனுமதியளிக்கப்பட்டு, பின்னர் ஒத்திவைக்கப்பட்டது"

என்று சட்டமன்றத்தில் வேளாண்மைத் துறை அமைச்சர் திரு. ஏ. கோவிந்தசாமி, ஒரு கேள்விக்குப் பதிலளித்தார்.

பொன்னப்ப நாடார் :—"அந்தத் திட்டத்தை இப்போது மறு பரிசீலனை செய்யப்படுமா?"

அமைச்சர் :—"1960-ல் ரூ. 5,91,000 செலவாகும் என்று மதிப்பிடப்பட்டிருந்தது; அதன்பிறகு அது ரூ. 17 இலட்சமாக உயர்ந்ததால் தள்ளி வைத்தார்கள்; மீண்டும் அதைப் பரிசீலனை செய்வதுபற்றி யோசிக்கப்படும்."

கோவையில் பயிர்கள் பாதிப்பு

விவசாயிகளின் நிலைமை உணர்ந்து அரசு நடவடிக்கை

சென்னை, மார்ச் 9—

சட்டமன்றப் பேரவை 41-வது விதியின்கீழ் திருவாளர்கள் சு. துரைசாமி, பி.என். பரமசிவம் ஆகியோர் கொடுத்த கவன ஈர்ப்பு அறிவிப்பையொட்டி வருவாய்த் துறை அமைச்சர் திரு. கே.ஏ. மதியழகன் பின்வரும் அறிக்கையை அளித்தார்:—

"கோயம்புத்தூர் மாவட்டத்தின் சில பகுதிகளில் பருவ மழை பொய்த்துவிட்டதன் காரணமாகப் புன்செய்ப் பயிர்கள் சாவியாகிவிட்டன.

பாசனக் கிணறுகளில் நீர் கிடைப்பது அரிதாகிவிட்டதால் மிகப் பெரும் பகுதிகளில் தோட்டப் பயிர்கள்கூடப் பாதிக்கப்பட்டுள்ளன.

நீர்த்தேக்கங்களிலிருந்தும் வாய்க்கால்களிலிருந்தும் பாசனம் பெறும் வசதியுடைய நன்செய்ப் பயிர்கள் ஓரளவிற்கு நன்னிலையில் உள்ளன; ஆனால் சிறு ஆறுகளில் வாய்க்கால் பாசன ஏற்பாட்டின்கீழுள்ள நன்செய்ப் பயிர்கள் பெரும்பாலும் வாடிவிட்டன. பெரும்பான்மையான பாசன ஏரிகளுக்கு நீர் கிடைக்கவில்லை.

நடப்புப் பசலியில் கடன் தவணைகளைச் செலுத்துவது கடினமென்று உழவர்கள் உணர்கின்றனர். கடன் தவணைகளையும், நில வரியையும் மெதுவாக வசூல் செய்யுமாறு சார்நிலை அதிகாரிகளுக்கு மாவட்ட ஆட்சியாளர் கட்டளை பிறப்பித்துள்ளார்.

பல கிராமங்களில் குடிநீர்ப் பஞ்சமும் ஏற்பட்டுள்ளது. ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியக் குழுக்கள் ஆகியவற்றிடம் உள்ள நிதியைக் கொண்டு குடிநீர்க் கிணறுகளை ஆழப்படுத்துமாறு மாவட்ட ஆட்சியாளர் கட்டளை பிறப்பித்துள்ளார்.

மாவட்டம் முழுவதிலும் உள்ள பருவ நிலைமை குறித்து மாவட்ட ஆட்சியாளர் இன்னும் மதிப்பீடு செய்யவில்லை; மதிப்பீடு செய்து முடித்ததும் குறிப்பான செயற்குறிப்புகளை அனுப்பிவைப்பதாக மாவட்ட ஆட்சியாளர் உறுதி கூறியுள்ளார்."

மாநகராட்சித் தேர்தல்

வாக்காளர் பட்டியல் திருத்தம் பற்றி முதலமைச்சர் தகவல்

"சென்னை மாநகராட்சிக்குத் தேர்தல் நடத்துவதற்குமுன்பு, அதன் வாக்காளர் பட்டியலைத் திருத்தியமைப்பதுபற்றி அரசு ஆலோசனை செய்து கொண்டிருக்கிறது"

என முதலமைச்சர் அண்ணா அவர்கள், சட்டமன்ற மேலவையில், கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையில் தெரிவித்தார்.

புதுவை வட்ட தி.மு.க.

கிளைக் கழகங்களுக்கு:

"புதுவை 8-கொம்யூன்களிலும் உள்ள கிளைக் கழகங்கள், 31—12—67-ல் தலைமைக் கழகத்தில் உறுப்பினர் உரிமைச் சீட்டு பெற்றவர்கள் தற்கால அமைப்பு ஏற்படுத்தியிராவிட்டால், 15—3—68-க்குள் தேர்தல் நடத்தி, அந்தந்தக் கிளையின் முகவரியுடன் என்னிடம் கீழ்க்கண்ட முகவரிக்குத் தொடர்புகொள்ள வேண்டுகிறேன். செயலாளர், பிரதிநிதிகள் பதிவு எண்ணையும் பதியப்பட்ட தேதியையும் விவரமாகத் தெரிவிக்குமாறு வேண்டுகிறேன்"

என, வட்டச் செயலாளர் எம். ஏ. சண்முகம் (புதுவை வட்டச் செயலாளர், திருப்பணும் பாக்கம், குறிவிநத்தம் அ. நி, பாகூர் வழி.) அறிவிக்கிறார்.

இரயில்வே எஞ்சினியர்கள் மீது இந்தித் திணிப்பு

3 மாத காலத்துக்குள் கைவிடப்பட வேண்டும்

மத்திய அரசுக்கு பொறியியல் கல்லூரி மாணவர்கள் தூதுக்குழு

திருச்சி, மார்ச் 10—

இரயில்வேத் துறையில் எஞ்சினியர்கள் மீது இந்தி திணிக்கப்படுவதால், தென்னாட்டு எஞ்சினியர்களுக்கு இழைக்கப்படும் அநீதியை இரயில்வேத் துறை அமைச்சரையும், மற்றவர்களையும் சந்தித்து எடுத்துரைப்பதற்குத் தூதுக்குழு ஒன்றைப் புதுடில்லிக்கு அனுப்புவதென திருச்சி—மதுரை—காரைக்குடி எஞ்சினியரிங் கல்லூரி மாணவர் பிரதிநிதிகளின் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டிருக்கிறது.

இத்துறையில் இந்தி திணிக்கப்படுவதை எதிர்த்துத் தாங்கள் நடத்திவந்த கிளர்ச்சியைத் தற்காலிகமாக நிறுத்திவைத்து வகுப்புகளுக்குத் திரும்புவதென முடிவு மேற்கொள்ளப்பட்டது.

இப்பிரச்சினைக்குத் திட்டவட்டமான தீர்வு காண்பதற்கு மத்திய அரசுக்கு மூன்று திங்கள் காலகெடு தருவதெனவும் முடிவு மேற்கொள்ளப்பட்டது.

'தங்கக் கட்டுப்பாட்டு உத்தரவை நீக்குக'

இரா. செழியன் வற்புறுத்தல்

புதுடில்லி, மார்ச் 11—

"தங்கக் கட்டுப்பாட்டு உத்தரவு எந்த நோக்கத்துக்காகப் பிறப்பிக்கப்பட்டதோ அந்த நோக்கம் சிறிதும் நிறைவேறவில்லை.

"14 காரட் தங்கத்தைப் புகுத்தியது, தங்கத்தின் மதிப்பைக் குறைக்கத்தான் பயன்பட்டிருக்கிறது.

"எனவே, தங்கக் கட்டுப்பாட்டை உடனடியாக அறவே நீக்கிவிட வேண்டும்"

என்று, நாடாளுமன்ற மக்களவையில் கழக உறுப்பினர் இரா. செழியன், தனி நபர் மசோதா மீது பேசுகையில் வற்புறுத்தினார்.

கோத்தகிரியில் சுற்றுலா மாளிகை

சென்னை, மார்ச் 9—

"நீலகிரி மாவட்டம் கோத்தகிரியில், ரூ. 1,75,000 செலவில் சுற்றுலா மாளிகைக்கான கட்டிடம் வாங்கப்பட்டுள்ளது.

"கோத்தகிரியை சுற்றுலா மையமாக மேம்படுத்த ரூ. 30,000 செலவிடத் திட்டமிடப்பட்டுள்ளது; சாலைகள் அமைப்பதற்கான நிலங்கள் கையகப்படுத்தப்பட்டு வருகிறது"

என்று சட்டமன்றத்தில் கழக உறுப்பினர் பெள்ளியின் கேள்விக்குப் பதிலளிக்கையில் அமைச்சர் தெரிவித்தார்.

கைத்தறி பொருட்காட்சி

34, பாந்தியன் சாலை எழும்பூர். சென்னை-8.

விசேஷ தள்ளுபடி 10%

நிகழ்ச்சி நிரல்

11—3—1968 திங்கள்

மாலை 6.00 மணி தலைவர்: திரு. எம். பக்தவத்சலம் பி.ஏ.பி.எல்.
பேச்சாளர்: திருமதி சௌந்திரம் கைலாசம்
மாலை 7.00 மணி நாடகம்: 'இலட்சியத் துடிப்பு'—கோ-ஆப்டெக்ஸ் நாடகக்குழுவினர்

12—3—1968 செவ்வாய்

மாலை 6.00 மணி தலைவர்: திரு. இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ. கல்வி மற்றும் தொழிலமைச்சர்
பேச்சாளர்: திருமதி இராஜேஸ்வரி நடராஜன் பி.ஏ.
மாலை 6.30 மணி கைத்தறி யாடை அணிவகுப்பு: 'என்ட்ரி என்கோர்' (Entree Encore)
மாலை 7.00 மணி நாடகம்: 'துரோணர்'—நேஷனல் தியேட்டர்ஸ்

13—3—1968 புதன்—மாணவர் தினம்

மாலை 6.00 மணி தலைவர்: திரு. பி. இராமச்சந்திரன் ஐ.ஏ.எஸ்., கைத்தறி நெறியாளர், சென்னை
பேச்சாளர்: திரு. எம். சுரேந்திரன் எம்.எல்.ஏ., பேச்சுப் போட்டியில் வெற்றிபெற்ற மாணவர்கள்
மாலை 7.00 மணி கலைநிகழ்ச்சி: மாணவர்களின் பல்கலை நிகழ்ச்சிகள்

14—3—1968 வியாழன்

மாலை 6.00 மணி தலைவர்: திரு. நா. மகாலிங்கம் பி.எஸ்ஸி., எம்.ஐ.ஈ.
பேச்சாளர்: திரு. ஈ. வெ. கி. சம்பத்
மாலை 7.00 மணி நாடகம்: 'கள்வனின் காதலி'—டி.கே.எஸ். சகோதரர்கள்

கண்காட்சி நேரம் தினசரி மாலை 3 மணியிலிருந்து 10 மணி வரை — அனுமதி இலவசம்

வேலையிழக்கும் மண்வளப்பாதுகாப்புப் பணியாளர்கள்

மாற்று வேலை தர அமைச்சர் ஏ. கோவிந்தசாமி உறுதி

சேலம், மார்ச் 10—

இங்கு நடைபெற்ற தமிழ்நாடு மண்வளப் பாதுகாப்புத் துணைப் பணியாளர்களின் மாநாட்டில், 150 துணைப் பணியாளர்கள் ஆட்குறைப்புக்கு ஆளாவர் அல்லது ஆட்குறைப்பைச் சந்திக்க இருக்கின்றனர் என்று வேளாண்மைத்துறை அமைச்சர் ஏ. கோவிந்தசாமி அவர்களிடம் எடுத்துச் சொல்லப்பட்டது.

ஆனால், அவர்களை வேறு துறைகளில் வேலைக்கு அமர்த்திக் கொள்ள, கூடுமானவரையில் ஏற்பாடு செய்வதாக அமைச்சர் உறுதிமொழி அளித்தார்.

நீண்டகால மண்வளப் பாதுகாப்புத் திட்டத்துக்கு ரூ. 100-இலட்சம் ஏக்கரில் செயல்படுத்தத் திட்டமிடப்பட்டிருக்கிறது என்றும், தற்போது 6-இலட்சம் ஏகரில் மட்டுமே இத்திட்டம் செயல்படுத்தப்பட்டிருக்கிறது என்றும் அவர் கூறினார்.

ரோஜா பாக்கு & புகையிலை

N. V. K. M. & சன்ஸ், திண்டுக்கல்

காங்கிரசாட்சியில் செயலற்றதாக்கப்பட்ட நகராட்சிகள்

கழக ஆட்சியில் இயங்குவது பற்றி அமைச்சர் விளக்கம்

சென்னை, மார்ச் 8—

"கடந்த கால ஆட்சியினரால் செயலற்றதாக ஆக்கப்பட்ட நெல்லை நகராட்சி மன்றம், 15—5—67 முதல் மீண்டும் இந்த அரசினால் செயலாற்றச் செய்யப்பட்டது"

என்று திரு. கே. விநாயகம் கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையில் உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு. மா. முத்துசாமி சட்டமன்றத்தில் தெரிவித்தார்.

துணைக் கேள்விகளுக்குப் பதிலளிக்கையில் அவர் மேலும் கூறியதாவது:—

"அந்த நகராட்சியை முந்திய அரசினர் கலைத்தது பற்றி வழக்குமன்றதில் வழங்கப்பட்ட தீர்ப்பு முழு விவரம் இப்போது என் கையில் இல்லை: கீழ் வழக்குமன்றத்தில் நகராட்சிக்குச் சாதகமாகவும், உயர் நீதி மன்றத்தில் பாதகமாகவும் தீர்ப்புக் கிடைத்தது. அடுத்து புதிய ஆட்சி ஏற்பட்டுவிட்டதால், புதிய சட்டம் இயற்றி அந்த நகராட்சிமன்றத்தைச் செயல்படச் செய்யப்பட்டது.

"முந்திய ஆட்சியால் செயலற்றதாக்கப்பட்ட நகராட்சிகளை இந்த அரசு இயங்கச் செய்திருக்கிறது என்பதை உறுதிப்படுத்தவும், அதனை நாட்டு மக்களுக்கு அறிவிக்கவும்தான், மாண்புமிகு உறுப்பினர் இந்தக் கேள்வியைக் கேட்டிருக்கிறார் என்று கருதுகிறேன்."

'வேலையிழப்பவர்கள் வீட்டுக்கு அனுப்பப்படமாட்டார்கள்'

'மனிதாபமானத்துடன் செயல்படுவோம்'

பொறியியல் துறையினருக்கு அமைச்சர் கருணாநிதி உறுதிமொழி

சென்னை, மார்ச் 10—

"பொறியாளர்களிடையே ஏற்பட்டிருக்கும் வேலையில்லாத் திண்டாட்டத்திற்குக் காரணம், நான்காவது ஐந்தாண்டுத் திட்டம் உருப்படியான முறையில் வடிவெடுக்காததுதான்—சரியாக வரையப்படாததுதான்; அதனால்தான் நம்மை, வேலையில்லாத் திண்டாட்டத்திற்கு ஆட்படுத்தும் நிலை இருக்கிறது.

"பொறியர்கள் பலர் என்னைச் சந்தித்தனர்; 'அவர்கள் அனைவரும் வேலையிழக்க வேண்டியவர்கள்' என்று தலைமைப் பொறியாளர் எழுதியிருந்தார்; அது சட்டம்; மனிதாபிமானம் இருந்தாலும் சட்ட விதிப்படி அவர் அப்படி எழுதியிருந்தார்!

"ஆட்சிப் பொறுப்பில் இருக்கும் நாங்கள், இத்துறையில் மனிதாபிமான உணர்ச்சியுடன் நடந்துகொள்வோம் என்ற உறுதிமொழியை அளிக்கிறேன்; வேலையிலிருந்து நீக்கப்பட வேண்டியவர்களை, கொஞ்சம் சம்பளக் குறைவு உள்ள பணிகளிலாவது அமர்த்துவோம்; 'எவரும் வேலையிழப்பர்—வீட்டுக்கு அனுப்பப்படுவர் என்ற நிலையை உருவாக்கமாட்டோம்' என்ற உறுதிமொழியை அளிக்கிறேன்.

"'வேலையில்லாதவர்கள்' என்ற அடிப்படையிலாவது அவர்களை அரசாங்கம் வைத்துச் சம்பளம் தரும்; 'இலாகா இல்லாத அமைச்சர்'போல், 'வேலையில்லாத பொறியாளர்கள்' என்று வது அரசு வைத்திருக்கும்; 'அவர்களை வீட்டுக்கு அனுப்பிவிடாமல் பார்த்துக்கொள்ளும்படிக் கேட்டுக்கொண்டிருக்கிறேன்' என்று அவையடக்கத்திற்காகச் சொன்னாலும், 'ஆணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது' எனத் தெரிவித்துக்கொள்கிறேன்"

என்று, பொதுப்பணித் துறை அமைச்சர் மு. கருணாநிதி அவர்கள், தமிழக நெடுஞ்சாலைப் பொறியாளர் ஆண்டு விழாவில் கலந்து பேசுகையில் தெரிவித்தார்.

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

போய், அந்தச் சம்பவத்துக்குப் பின்னும் தி. மு. கழகம், அரசியல் முறைப்படிகூடப் பதட்டப்படாமல், 'அரசு, சட்டப்படி நடவடிக்கை எடுக்கட்டும்' என வாளாவிருக்கிறதே — அது, சட்டமும் அமைதியும் இருப்பதைத்தான் காட்டுகிறது!

இங்கே, 'சட்டம்—அமைதி—சனநாயகம் சீர்குலைந்துவிட்டது' என்று திரும்பத் திரும்ப நீங்களேதான் கூறிக்கொள்கிறீர்களே தவிர, வேறு யாராவது ஒரு வார்த்தை பேசியிருக்கிறார்களா? அப்படியென்ன—நாட்டிலே உங்களைத் தவிர விமர்சகர்களே இல்லாமலா போய்விட்டனர்? உங்கள் மத்திய அமைச்சர்களில் ஒருவராவது உங்களைப்போல் பேசக் காணோமே! அல்லது தமிழ்நாட்டிலதான் எத்தனைச் சிந்தனையாளர்கள் இருக்கிறார்கள்—அவர்களில் யாராவது இதுவரையில் கேட்டிருக்கிறார்களா, உங்கள் தலைவரைப் போல்!"

"சரி சரி; ஆளைக் குழப்புகிறது உன்னுடைய பதில்; தலைவரது கேள்வியைக் கேட்டுவிட்டு, எப்படி முறுக்கேறி இருந்தேன்......"

"உன்னைப்போல் இருப்பவர்களுக்கு 'முறுக்கு' ஏறவேண்டும் என்பதற்காகத்தானே உங்கள் தலைவர் இப்படிக் கேட்டிருக்கிறார்? இல்லையென்றால், அவருக்குத் தெரியாதா, உண்மை நிலை? பக்தவத்சலம் காலத்தில் நடந்த 'இராணுவ ஆட்சி'யைப் பார்க்காதவரா அவர்? உன்னைப்போன்ற கட்சி உறுப்பினர்களுக்கு 'ஓர் உற்சாகம் பிறக்கட்டுமே' என்ற அளவில்தான் அவர் பேசியிருக்கிறார்! ஆனால், பெரிய பதவியை வகித்தவர் இப்படியெல்லாம் பொதுவாகப் பேசி தவறிழைக்கக்கூடாது! அப்புறம், 'தாய் எட்டடி பாய்ந்தால் குட்டி பத்தடி பாயும்' என்ற கதையாகிவிடும்!

—எஸ். ஆர்.

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக, திரு. இரா. செழியன் எம்.ஏ., எம்.பி. அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு, அழகிரி அச்சகத்தில் (24, சூரியநாராயண செட்டித் தெரு, சென்னை-13) அச்சிட்டு வெளியிடப்படுகிறது.